உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்
UMAR PULAVAR TAMIL LANGUAGE CENTRE

# பயணம்

மாணவர் இதழ்

ஆகஸ்ட் 2016

**தொடர்புக்கு:**

✍ 2, பீட்டி சாலை,
சிங்கப்பூர் 209954

✆ 62980781

**இணையப் பக்கம்:**
www.uptlc.moe.edu.sg

புதிது — ஆண்டு மலர் 2015
பார்க்க: இணையப் பக்கம்


| உள்ளே... | பக்கம் |
|---|---|
| நலன் காப்போம் | 1 |
| படித்ததில் பிடித்தது | 1 |
| மாணவர் படைப்புகள் (கவிதை) | 1 |
| அழகுதமிழ் அறிவோம் | 1 |
| மாதிரிக் கட்டுரைகள் | 2&3 |
| மாணவர் படைப்புகள் | 2&3 |


## முக்கிய நிகழ்வுகள்

- **39th Annual Speech & Prize Presentation Ceremony**
  *ஆகஸ்ட் 6*
- **TamilFest 2016**
  *ஆகஸ்ட் 6*
- **Preliminary Exam (Sec 4 HT)**
  *ஆகஸ்ட் 20*
- **SA2 Oral & LC Exams (All Levels)**
  *ஆகஸ்ட் 22 - 26*

## நலன் காப்போம்!

ஒரு சிறு மீன்பிடி கிராமமாக உருவெடுத்த சிங்கை , பிரிட்டிஷ் அதிகாரம் , உலகப்போர், ஜப்பானியர் ஆக்கிரமிப்பு, மலேசியப் பிரிவு எனப் பல தடைகளைக் கடந்து, போராடிச் சுதந்திரம் பெற்று 51ஆண்டுகளைப் பின்தள்ளி விருட்சமாய் விளக்கம் கண்டுள்ளது.

ரா.ஃபிள்ஸ் பெருமகனார் கண்டுபிடித்த சிறிய மீன்பிடி கிராமம், இன்று உலகப் பந்தில் உன்னத இடத்தைப் பிடித்து, உலகின் முக்கிய வணிக மையங்களில் ஒன்றாகவும் மிகப்பெரிய நிதி மையங்களில் ஒன்றாகவும் திகழ்ந்து, வெற்றியும் புகழும் வளமும் நிறைந்து உச்சம் தொட்டுள்ளது.

நம் முன்னோர் உழைப்பின் பயனை முழுமையாக அனுபவிக்கும் நாம் நமது கடமையையும் நாட்டிற்குச் செய்தல் அவசியம். 'நாட்டிற்கு உழைத்தல் இமைப்பொழுதும் சோராதிருத்தல்' என்ற மகாகவி பாரதியின் கூற்றை நடைமுறை வாழ்வில் மெய்ப்பிப்போம்! நாட்டு நலன் காப்போம்!

*இப்படிக்கு...*
**இதழ்க் குழு**

## படித்ததில் பிடித்தது!

கரும்பலகையில் '1000' என்று எழுதிவிட்டு வகுப்பிலிருந்த குறும்புத்தனமான ஒரு மாணவனைப் பார்த்து, அவனது கணித ஆசிரியர், "இது எவ்வளவு?" என்று கேட்டார். கேள்வியின் எளிமை கண்டு சட்டென்று 'ஓராயிரம்' என்று அவன் பதிலளித்தான்.
ஆசிரியர் கூடுதலாக ஒரு பூஜ்யத்தை அந்த எண்ணின் வலப்பக்கத்தில் '10000' என எழுதிவிட்டு, எவ்வளவு என்று கேட்டார். 'பத்தாயிரம்' என்று அவன் பதிலளித்தான். இப்போது இன்னொரு பூஜ்யத்தை அந்த எண்ணின் இடப்பக்கத்தில் '010000' என்று எழுதிக்காட்டி, அது எவ்வளவு என்று கேட்டார். 'பத்தாயிரம்' என்று அவன் பதில் கூறினான்.

ஆசிரியர் அவனைப் பார்த்துச் சிரித்தவாறே, ஒரு முக்கியமற்ற எண் ஒரு முக்கியம் வாய்ந்த எண்ணைப் பின்தொடர்ந்து வந்தால், அதன் மதிப்புக் கூடுகிறது. அதே எண் அந்த முக்கியத்துவம் வாய்ந்த எண்ணிற்கு முன்னால் செல்லும்போது அதற்கு மதிப்பேதும் இல்லை. அதுபோன்றதுதான் ஆசிரியர் மாணவர் உறவும். ஒரு மாணவன் தன் ஆசிரியரைப் பின்தொடர்ந்து சென்றால் அவனது மதிப்புக் கூடுகிறது. அதுவே தலைகீழாக அமைந்தால்? பதில் உனக்கே தெரியும் என்று கூறினார்.



**சிங்கை மண்ணில்**
**உயர்ந்து சிறந்தாய்!**
**எங்கள் இதயம்**
**அழவே மறைந்தாய்!**

## படிப்பது எப்படி?

எந்தவொரு வினாவையும் விட்டுவிடுதல் கூடாது.

வினாவுக்கு ஏற்ற வண்ணம் விடைகள் உள்ளனவா என்பதைச் சரிபார்க்கவும்.

மொழிப்பிழைகளை மீண்டும் சரிபார்த்துத் திருத்தவும்.

தொடரும்...

## அழகுதமிழ் அறிவோம்!

| | |
|---|---|
| IMMIGRATION | குடிநுழைவு |
| PAVEMENT | நடைபாதை |

**மாணவர்களின் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன.**

## வாழிய சிங்கை!

வெறும் மண்தான்!
செடி கொடிகளுடன்
சின்னஞ்சிறு தீவு!
மன்னன் கண்டான்
சிங்கத்தை!
அதையே பெயராக்கி
அழைத்தான்
'சிங்கப்பூரா'!

செழித்து வளர்ந்தது
சிங்கை நகரம்!
சிறு தீவு...சீர்மிகு
நாடானது!
இன்று பெரிதாய்
உலகம் வியக்கும் உச்சத்தில்!
வாழிய சிங்கை! வாழிய நீடு!

ஹனிஷா (1HT1)

## அலங்காரம்!

சிவப்பும் வெள்ளையும்
சிங்கையை அலங்கரித்தது
வாணவேடிக்கை
வானை அலங்கரித்தது
வண்ண விளக்குகள்
கட்டடங்களை அலங்கரித்தது
சிங்கப்பூரர்களின் மகிழ்ச்சி
51-ஆம் தேசிய தினத்தை
அலங்கரித்தது!

பூர்வசந்தியா (1HT1)

இந்தப் பூமி
நம் தாய் பூமி!
தாயைக் காக்கக்
கைகொடுப்போம்!
அன்பைக் காட்டி
வணங்கிடுவோம்!
அதுவே நம் சாமி என்று!

பா.அரவிந்த் (1HT1)

# மாதிரிக் கட்டுரை

## 'இன்றைய இளையர்களிடம் காணப்படும் குறைபாடுகளும் அவற்றைக் களைவதற்கான வழிமுறைகளும்

'இன்றைய இளையர்கள் நாளைய தலைவர்கள்' என்பார்கள். இவ்விளையர்களே நாட்டை மிடுக்கோடு வழிநடத்தப்போகும் எதிர்காலத் தூண்களாகத் திகழ்வர். எனவே, அவர்கள் நற்குடிமக்களாகவும் ஈடும் எடுப்பும் மிக்க தனிமாண்புடன் சிறந்து விளங்குதல் மிக அவசியம். அவர்கள் அறிவிலும் ஆற்றலிலும் நற்பண்புகளிலும் உயர்ந்தவர்களாக மிளிர வேண்டும். ஆனால், இன்றோ இளையர்கள் 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று அலட்சியப்போக்குடன் நடைபோடுகின்றனர். இதனால் அவர்களிடம் சிற்சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அக்குறைபாடுகளைப் பற்றியும் அவற்றைக் களைவதற்கான வழிமுறைகள் பற்றியும் இக்கட்டுரை விவரிக்கும்.

இன்றைய இளையர்களிடம் பல குறைபாடுகள் குவிந்து கிடக்கின்றன. இதற்குக் காரணம் மாறிவரும் பரபரப்பான வாழ்க்கைச் சூழலே எனலாம். இன்று தொழில்நுட்ப வளங்கள் பெருகி வருகின்றன. இளையர்கள் இவற்றுக்கு அடிமையாகி வாழ்கின்றனர். கணினி, கைத்தொலைபேசி போன்ற சாதனங்கள் அவர்களின் வாழ்க்கையை முழுமையாக ஆக்கிரமித்துள்ளன. இதனால் கல்வி கற்கும் நேரம் சூறையாடப்படுகின்றது. 'யானை தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக்கொள்வது போல்' இளையர்கள் தங்கள் எதிர்காலத்தை அவர்களாகவே சீரழித்துக்கொள்கின்றனர். இவ்வாறு எந்நேரமும் தொழில்நுட்பச் சாதனங்களைச் சார்ந்திருப்பது இளையர்களிடம் காணப்படும் பெருங்குறைபாடாகக் கருதப்படுகின்றது.

உலகம் இன்று வசதிகள் நிறைந்த சொகுசான வாழ்க்கை முறையை இளையர்களிடம் கொண்டு சேர்த்துள்ளது. எண்ணிலடங்கா வாய்ப்புகளும் வசதிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதனால் கஷ்டம் என்றால் என்னவென்றோ, உழைப்பு என்றால் என்னவென்றோ அறியாமல் ஒருவித மாய உலகில் வாழ்கின்றனர். இத்தகு மெத்தனப் போக்கே, 'உழைப்பே வெற்றிக்கு முதற்படி' என்பதை உணரமுடியாமல் செய்துவிட்டது. இக்குறைபாடு அவர்களின் எதிர்கால வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் பெருந்தடைக்கல்லாக இருக்கின்றது.

'மூத்தோர் சொல் கேள்' என்ற கூற்றை மறந்து இன்றைய இளையர்கள் வாழ்கின்றனர். பெற்றோர், தாத்தா, பாட்டி போன்றவர்களின் வார்த்தைகளுக்குச் செவி சாய்க்காமல் வாழ்கின்றனர். வெளியிலும் மூத்தோரை மதித்து நடக்கும் போக்கைக் காணமுடிவதில்லை. இத்தகு குறைபாடும் இளையர்களிடம் காணப்படுகின்றது. மேலும், இன்றைய இளையர்கள் பெற்றோரைக் காட்டிலும் நண்பர்களே முக்கியம் என்ற தவறான மனநிலையில் வாழத் தலைப்பட்டுள்ளனர். நண்பர்களுடன் அதிக நேரத்தைச் செலவிடும் இவர்கள் பெற்றோரிடம் நேரத்தைத் செலவிட விரும்புவதில்லை. இதனால் தலைமுறை இடைவெளி பெருகி, அவர்களுக்குக் குடும்ப உறவின் முக்கியத்துவம் புலப்படாமலே போய்விடுகின்றது.

இளையர்கள் காலத்தின் அருமையை உணராமல் வாழ்கின்றனர். 'காலம் பொன் போன்றது' என்ற தாரக மந்திரத்தைப் பின்பற்றாமல் வாழ்கின்றனர். மேலும், நேரத்தைத் திட்டமிட்டுச் செயலாற்றும் பழக்கமும் அவர்களிடம் இருப்பதில்லை. இதனால் தோல்விகளைச் சந்தித்து மனம் துவண்டு மனவுளைச்சலுடன் வாழும் நிலைக்கு ஆளாகியுள்ளனர். அதுமட்டுமன்றி, இன்றைய இளையர்கள் ஆடம்பர வாழ்க்கை வாழ முற்பட்டுள்ளனர். அனாவசியப் பொருட்களை வாங்குவதிலும், அர்த்தமில்லாமல் செலவு செய்வதிலும் கவனம் செலுத்துகின்றனர். 'சிறு துளி பெரு வெள்ளம்' என்ற பழமொழியின் பொருளை உணராமல் சேமிப்புப் பழக்கம் இல்லாமல் வாழ்கின்றனர். மேலும், இது அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்குத் துன்பத்தை அளிக்கும். இத்தகு குறைபாடும் இளையர்களிடம் காணப்படுவது மிகவும் வேதனைக்குரியது.

இளையர்களிடம் பொதிந்து கிடக்கும் இக்குறைபாடுகளைக் களைவதற்கு, இளையர்கள் தொழில்நுட்பத்தை அளவோடு பயன்படுத்த வேண்டும். அதற்குப் பதிலாக, பயனுள்ள வழியில் அவர்கள் நேரத்தைச் செலவிட வேண்டும். இதற்குத் திட்டமிடும் பழக்கத்தைக் கைகொள்வது அவசியம். பெற்றோர்களும் இதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும். மூத்தோர்களுக்கு மரியாதை அளிக்கும் பண்பை வளர்த்துக்கொள்வதோடு, ஆடம்பர வாழ்வைக் கைவிட்டுச் சேமிப்புப் பழக்கத்தை இளம்பருவத்திலேயே கடைப்பிடித்து வருதல் வேண்டும். "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்ற தாரக மந்திரத்தை மனதிற்கொண்டு தங்களிடம் காணப்படும் குறைபாடுகளைக் களைந்து ஒளிமயமான எதிர்காலத்திற்குள் அடியெடுத்து வைக்க வேண்டும். அப்போதுதான் நாடும் வீடும் நலம் காணும். இளைய சமுதாயமும் ஏற்றம் காணும்.

அகிலேஷ் (4HT1)

## நேசி!

இயற்கையை நேசி!
இதயம் இளமையாகும்.
பெண்ணை நேசி!
கவிதை மலரும்.
உன்னை நேசி!
உண்மைகள்
பிறக்கும்!
வாழ்க்கையை நேசி!
வானமும் வசப்படும்!
நாவை நேசி!
நல்வார்த்தைகள் பிறக்கும்!
உழைப்பை நேசி!
உயர்வு உறுதியாகும்.
நாட்டை நேசி!
நல்வாழ்வு கிட்டும்.
அனைத்தையும்
அன்னையாய் நேசி!
அன்பு கிட்டும்!
நம்பிக்கை கொள்!
நாளை உனதாகும்.



சரித்திரா (2HT1)

## மரம்!

நீ என்னை வெட்டி விற்று
வாழ்ந்து மடி!
உன் பிள்ளைகள் சுவாசிக்க
விலைகொடுத்து வாங்கட்டும்
காற்றை!

## நாக்கு

ரெட்டை நாக்குகள்
தடையின்றி எதுவும் பேசும்
இல்லாததையும்
பொல்லாததையும் சேர்த்துஞ்

அப்ரின் (3HT1)

## இயற்கை

வாழும் வரை
நான் அவளைக் காப்பேன்!
அவள் வாழும் வரை
என்னைக் காப்பாள்!
நாம் வாழ்வது
அவள் கையில்
அவள் வாழ்வது
நம் கையில்
இயற்கையைக் காப்போம்!
இயற்கையும் நம்மைக் காக்கும்!


ஆனி சாப்ரின் (1HT2)

## அம்மா

அம்மா

எனது அம்மாவே!
அனைத்தும் பார்த்த அம்மாவே!
என்னைப் பெற்ற உன்னை நான்
என்றும் போற்றி மகிழ்ந்திடுவேன்!

வித்யாதர் (1HT1)



அன்பு கொடுக்கும்
அம்மா!
ஆறுதல் தரும் அம்மா
ஊக்கம் அளிக்கும்
அம்மா
உதவி செய்யும் அம்மா
அம்மா நமது தெய்வம்
அவர்தாம் நமது உலகம்!

ஹர்ஷிதா (1HT2)


## மழை!

ஒரு துளி! உயிர்த் துளி!
விழுந்திடும் மழைத்துளி!
நிலத்திற்குக் குளிர்ச்சி
நனைவோர்க்கு மகிழ்ச்சி!
மழையை ரசிப்போம்
மகிழ்ச்சி ஐஸ்கிரீம் ருசிப்போம்!

வீ.ப்ரியங்கா வள்ளி(1HT1)

## வலி!

அனைவர் வாழ்க்கையும்
மாயக்குதிரையும் அல்ல!
பறக்கும் பட்டாம்பூச்சியுமல்ல!
சிலரின் வலி நமக்குத்
தெரியாது



வலியைப் பொறுத்துக்கொண்ட
2ள்ளத்திற்கு மட்டுமே
2ண்மையான வலி புரியும்!
போலியான சிரிப்பும்
பொய் எனத் தெரியும்!

ஜன்னா(1HT1)

## சிங்கை!

வேற்றுமையில் ஒற்றுமை
விளக்கியவள் நீயே!
சாதனையின்
2ச்ச எல்லை தொட்டவளும் நீயே!
கண்ணிமைக்கும் நேரத்தில்
ஐம்பதுகளைக் கடந்தாய்!
காத்திருப்பேன் - 2ன்
நூற்றாண்டுச் சாதனை காண!

அகிலேஷ் (4HT1)

## மாதிரிக் கட்டுரை

### என் தோழிக்கு ஏற்பட்ட ஒரு சிக்கலும் அதற்கான தீர்வும்

“நீ ஏன் என்னிடம் சிறிது காலமாகச் சரியாகப் பேசுவதில்லை?” என்று நான் என் தோழி சமீராவைக் கேட்டேன். அவள் அதற்குப் பதில் அளிக்கவில்லை. எனக்குக் கோபம் தலைக்கு மேல் ஏறியது. சென்ற இரு வாரங்களாக அவள் என்னைத் தவிர்த்தாள். நானும் என் பொறுமையை இழக்காமல் அவளிடம் என்ன நேர்ந்தது என்று கேட்டுக்கொண்டே நச்சரித்து வந்தேன். ஆனால், அவள் அதற்கு எந்தப் பதிலும் அளிக்கவில்லை.

நானும் சமீராவும் பாலர் பள்ளியிலிருந்து இன்று வரை ஒரே பள்ளியில் ஒரே வகுப்பில் படித்து வருகிறோம். நாங்கள் இருவரும் மிக நெருக்கமான நண்பர்கள். நாங்கள் ஒருவருக்கொருவர் எதையும் மறைத்தது இல்லை. அப்படி மறைத்தாலும் சிறிது நேரத்தில் கூறிவிடுவோம். இவ்வளவு நெருக்கமாக இருந்தும் அவள் என்னிடமிருந்து எதையோ மறைப்பது மிகவும் வேதனையை அளித்தது. நான் அவ்விடத்தைவிட்டு ஏமாற்றத்துடனும் வருத்தத்துடனும் சென்றேன். சிறிது நொடிகள் கழித்து யாரோ என்னை அழைப்பதுபோல் தோன்றியது. பின்னால் திரும்பிப் பார்த்தேன். சமீராவே அங்கு நின்றிருந்தாள்.

“என்னை மன்னித்துவிடு இன்பா!. நான் அதை உன்னிடமிருந்து மறைக்கவேண்டும் என்பது என் எண்ணம் அல்ல. ஆனால், எவ்வாறு கூறுவது என்று எனக்குத் தெரியவில்லை. நான் அதை நூலகத்தில் சொல்கிறேன், இங்கு வேண்டாம்” என்றாள் சமீரா. நான் அவளைப் பின் தொடர்ந்து நூலகம் சென்றேன். நூலகத்தில் யாரும் இல்லாத ஓர் இடத்தைப் பிடித்தோம். சமீரா வாய் திறந்தாள். “ இரண்டு வாரங்களுக்கு முன்பு என் தந்தை குடிபோதையில் காரை ஓட்டி ஒரு லாரியின் மீது மோதினார். இதனால், என் தந்தை காயமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். என் தந்தையே இதுநாள்வரை என் முழுக் குடும்பத்தையும் காப்பாற்றி வந்தார். ஆனால், இப்போது அவரின் மருத்துவச் செலவு மிகவும் அதிகமாக உள்ளதால் என் குடும்பத்தில் பணநெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால்தான் நான் பள்ளி உணவகத்திற்குக்கூட வருவதில்லை” என்று கூறி முடித்தாள்.

அவளின் கதையைக் கேட்டு நான் பெரும் அதிர்ச்சியடைந்தேன். நான் அவளுக்கு என்ன ஆறுதல் சொல்வேன்? நான் சமீராவின் தந்தையை என் தந்தை போலவே கருதியுள்ளேன். “சமீரா, உன் கவலை எனக்குப் புரிகிறது. நீ கவலைப்படாதே, உனக்கு எப்படியாவது நான் உதவுகிறேன்” என்று கூறினேன். பின்னர் இருவரும் ஒன்றாக வீடு திரும்பினோம்.

நான் வீட்டுக்குச் சென்றதும் என் தாயாரிடம் நடந்ததைக் கூறினேன். அதைக் கேட்டு அவரும் அதிர்ச்சி அடைந்தார். இதைப்பற்றி என் வகுப்பாசிரியரிடம் கூறச்சொன்னார். நானும் அவர் கூறியபடி செய்தேன். என் ஆசிரியர் இதுகுறித்துத் தலைமையாசிரியரிடம் பேசுவதாகக் கூறினார். பின்னர், தலைமையாசிரியர் சமீராவின் தந்தைக்கு நிதி உதவி வழங்குவதோடு, சமீரா இனிமேல் பள்ளி உணவகத்தில் சாப்பிடப் பள்ளியே பணம் செலுத்தும் என்றும் கூறினார். இதைக் கேட்ட சமீரா பெரும் மகிழ்ச்சி அடைந்தாள். அன்றிலிருந்து எங்கள் நட்பு இன்னும் வலுவானது. அன்றிரவே நானும் என் குடும்பத்தினரும் மருத்துவமனையில் இருந்த சமீராவின் தந்தையைக் காணச் சென்றோம்.

ஹெரால்ட் இன்பா (1HT2)

## பாதுகாப்பு

என் பாட்டி இந்தியாவில் இருக்கிறார். சென்ற ஆண்டு அவரது வீட்டிற்கு நானும் என் பெற்றோரும் சென்றோம். அது ஓர் அழகிய கிராமம். அந்தக் கிராமத்தில் நிறைய வீடுகள் இருந்தன. நான் என் பாட்டியின் வீட்டுத் திண்ணையில் பக்கத்து வீட்டுச் சிறுவர்களோடு விளையாடினேன். பிறகு, விளையாட்டு முடிந்ததும் சாப்பிடச் சென்றேன்.

சாப்பிடும்போது எதார்த்தமாக விரலில் இருந்த மோதிரம் காணாமல் போனதை அறிந்தேன். நான் அறக்கப் பறக்கத் தேட ஆரம்பித்தேன். வீடு முழுவதும் தேடினேன். ஆனால் என்னால் அதைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை.

என் பரபரப்பைக் கண்ட பாட்டி, என்ன நடந்தது என்று கேட்டார். நான் உண்மையைக் கூறினேன். “நீ அதைக் கீழே போட்டிருந்தாய். நான் அதை எடுத்துப் பத்திரமாக வைத்திருக்கிறேன்” என்றார். எனக்கு அப்போதுதான் உயிர் வந்தது. அவர் என் மோதிரத்தைப் பாதுகாத்து வைத்திருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்த அடுக்குப் பானைகளை இறக்கி வைத்து அதிலிருந்து என் மோதிரத்தை எடுத்தார். நான் அந்தப் பானையினுள் பல பொருள்கள் இருப்பதைப் பார்த்தேன். அவற்றைப் பற்றி என் பாட்டியிடம் கேட்டேன். அவர் ‘புல்லாக்கு, பாம்படம்’ என்று ஒவ்வொரு பொருளையும் எடுத்துக் காட்டினார். இன்னும் இதைப்போல நிறைய பொருள்கள் என் பாட்டி வீட்டில் இருப்பதாகவும் கூறினார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. மேலும், முக்கியமான பொருள்களை இந்த அடுக்குப்பானையில்தான் வைப்பேன்” என்று கூறினார். இந்தப் பாதுகாப்புச் சாதனத்தை இப்போதுதான் பார்த்தேன். அதை எனக்கு அறிமுகம் செய்து வைத்த பாட்டிக்கு நன்றி தெரிவித்தேன். அவரும் சிரித்துக்கொண்டே என்னைச் சாப்பிட அழைத்துச் சென்றார்.

சங்கர் காயத்திரி (1HT1)

## தங்க மகன்!

யாராலும் வெல்ல முடியாது
என்ற இலக்கை
நிர்ணயித்த குணம்!
நீச்சலில் சாதனை
நிகழ்த்திய சிங்கம்! - நாட்டின்
பெருமை காத்த
தங்க மகன்! - நமது
மனங்களைக் கவர்ந்த
மாவீரன்!

சுப்ரஜா (1HT2)



தங்கம் வென்ற
தங்க மகன்!
நம் நாட்டிற்கு ஏற்ற குடிமகன்!
தன் வீட்டிற்கும் ஏற்ற செல்ல மகன்!
உன்னைப் போல் நானும்
உயர வேண்டும் வாழ்வில்!

சைலேஷ் (1HT2)

## உயிர்நாடி

அப்போது எனக்கும் தேன்மொழிக்கும் ஐந்து வயதுதான். அவளும் நானும் நகமும் சதையும் போல் வாழ்ந்து வந்தோம். ஒவ்வொரு நாளும் எனக்கும் அவளுக்கும் நெருக்கம் கூடியது. ஒருநாள் திடீரென்று தேன்மொழி ஒரு விபத்தைச் சந்தித்தாள். அவளுடைய நிலை மிகவும் மோசமாக இருந்தது. அவளைப் பார்க்க மருத்துவமனைக்கு என் அம்மாவின் உதவியோடு விரைந்தோடினேன். “நான் இறப்பது உறுதியாகிவிட்டது. இறந்த பிறகு என் விழிகள் உனக்குத்தான்.” என்றாள். அதன்படி நான் விழிகள் பெற்று, இன்று உலகைப் பார்க்கின்றேன். ஆனால் விழி தந்த நட்பைப் பார்க்க முடியாமல் ஏங்குகின்றேன். இருட்டாக இருந்த வாழ்வு ஒளிமயமாக மாறுவதற்கு உதவிய என் தோழி என் வாழ்க்கையின் உயிர்நாடி என்பேன்.

சுப்ரஜா (3HT2)

## எங்களது இரங்கல்

சென்ற ஆண்டு சிங்கப்பூரின் தந்தை திரு லீ குவான் இயூ அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்தார். அவரின் பிரிவை நாம் மறக்கும் முன், இந்த வாரம் நம் முன்னாள் அதிபர் திரு எஸ் ஆர் நாதன் அவர்கள் உயிர் நீத்துள்ளார். இந்த இரண்டு மறைவுகளும் நம் நாட்டிற்குப் பேரிழப்பாகும். அவர்களின் ஆத்மா சாந்தி அடைய நானும் நம் நிலைய மாணவர்களும் பிரார்த்திக்கிறோம்.

கிஷன் (1HT2)

இன்றைய தொழில்நுட்ப உலகில், அனைவரின் கைகளையும் ஆன்ட்ராய்ட், ஐ-போன் போன்ற திறன்பேசிகள் ஆக்கிரமித்துக்கொண்டுள்ளன. வணக்கம் கூட இதழ்களை ஒதுக்கிவிட்டு, வாட்ஸ்அப் வழிதான் வந்து விழுகிறது. ஏன்? பிடித்த செய்திகளைப் புத்தகத்தில் படித்தால் கூட லைக் பட்டனைத்தான் விரல்கள் தேடுகின்றன. உலகம் உள்ளங்கைக்குள் சுருங்கிவிட்டது. நம் உணர்வுகளும் போன்சாய் மரங்களாய்ச் சுருங்க ஆரம்பித்துவிட்டன. எல்லாம் சுருங்கினும் நம் வாழ்வு சுருங்காமல் வாழ்ந்து பார்ப்போம்! குடும்ப உறவையும் பண்பாட்டுச் சிறப்பையும் மறக்காமல் கட்டிக்காத்து வாழ்வோம்!

## பூக்கள்

இயற்கையின் வண்ணப் படைப்பு
படைப்பினில் பாரே மயங்கும்
எண்ணிப் பார்க்க ஏங்குதே!
எண்ணும்போதே கிறங்குதே!
பச்சைக் கம்பளப் பூமியில்
பல வண்ணப் பூக்கள் ஆடுதே!
மணம் பரப்பும் ஜாலம்
மனதை மயக்கிச் சிலிர்க்குதே!
பூக்கள் உயிராய் இருக்குதே
பூமியும் அழகாய்ச் சிரிக்குதே!



கீர்த்தி மனோகரன் (3HT2)